பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**23 01 2026** **7 15**

வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** பிரதமர் திரு நரேந்திர மோடி, கேரளாவில் இன்று பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுவதோடு புதிய ரயில் சேவைகளை தொடங்கி வைக்கிறார்.

**2.** எரிசக்தி துறையில் இந்தியா மேற்கொண்டுள்ள சீர்திருத்தங்கள் உலகளாவிய போட்டித் திறனை ஊக்குவிப்பதாக உள்ளது என்று மத்திய அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

**3.** வரும் ஏப்ரல் மாதம் தொடங்கவுள்ள மக்கள் தொகை கணக்கெடுப்பின்போது கேட்கப்பட உள்ள 33 கேள்விகள் குறித்த அறிவிப்பை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.

**4.** பங்களாதேஷில் நாடாளுமன்றத் தேர்தலுக்கான பிரசாரம் நேற்று அதிகாரப்பூர்வமாகத் தொடங்கியது.

**5.** இந்தியா - நியூசிலாந்து அணிகளுக்கு இடையேயான இரண்டாவது ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி, கேரளாவில் இன்று பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுவதோடு புதிய ரயில் சேவைகளை தொடங்கி வைக்கிறார்.

ரயில் போக்குவரத்து, நகர்ப்புற மேம்பாடு, அறிவியல் மற்றும் புதிய கண்டுபிடிப்புகள், உயர்தர மருத்துவ சேவை மற்றும் மக்கள் சார்ந்த சேவைத் திட்டங்கள் இவற்றில் அடங்கும்.

திருவனந்தபுரத்தில் நாகர்கோவில் - மங்களூரு, திருவனந்தபுரம் - தாம்பரம், திருவனந்தபுரம் - **Charlapalli** இடையேயான மூன்று அம்ரித் பாரத் ரயில்களையும், திருச்சூர் - குருவாயூர் இடையே புதிய பயணியர் ரயிலையும் அவர் தொடங்கி வைக்க உள்ளார்.

புதிய அம்ரித் பாரத் ரயில்கள், கேரளா, தமிழகம், கர்நாடகா, தெலங்கானா, ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களை இணைக்கும் வகையில் கொண்டுவரப்பட்டுள்ளன.

அம்ரித் பாரத் ரயில்களில் குறைந்த கட்டணத்தில் பாதுகாப்பாகவும், குறித்த நேரத்திலும் பயணிகள் செல்வதற்கான வாய்ப்பை அளிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நகர்ப்புற மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில், நடைபாதை வியாபாரிகளுக்கு உதவும் வகையில் ஸ்வநிதி கிரெடிட் கார்டுகளையும் பிரதமர் வழங்க உள்ளார்.

தமது திருவனந்தபுரம் பயணத்தை முடித்துக்கொண்டு இன்று பிற்பகல் பிரதமர் தமிழகம் வருகிறார்.

<<<<>>>>

இந்தியா - பிரேசில் இடையிலான உத்திசார் ஒத்துழைப்பை வலுப்படுத்தவும், வரும் ஆண்டுகளில் அதனை அடுத்தகட்டத்திற்கு கொண்டு செல்லவும் இரு நாடுகளும் முடிவு செய்துள்ளன.

பிரதமர் திரு. நரேந்திர மோடியை நேற்று பிரேசில் அதிபர் திரு. லூலா டா சில்வா தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசுகையில் இதனை உறுதிப்படுத்தியதாக வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இரு நாடுகளுக்கிடையிலான வர்த்தகம், முதலீடு, தொழில்நுட்பம், பாதுகாப்பு, எரிசக்தி, சுகாதாரம், வேளாண்மை மற்றும் மக்களுக்கு இடையிலான உறவு என பல்வேறு துறைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது குறித்து இரு தலைவர்களும் திருப்தி தெரிவித்ததாகவும் அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

மண்டல மற்றும் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்கள் குறித்து இரு தலைவர்களும் தங்களது கருத்துகளை பகிர்ந்துகொண்டனர்.

பொதுவான சவால்களை எதிர்கொள்வதில் சீர்திருத்தப்பட்ட பன்னாட்டுக் கொள்கையின் அவசியத்தை இரு தலைவர்களும் வலியுறுத்தினர்.

பிரேசில் அதிபர் திரு. லூலா டா சில்வா விரைவில் இந்தியாவிற்கு வருகை தருமாறு இந்த உரையாடலின்போது பிரதமர் திரு. நரேந்திர மோடி அழைப்பு விடுத்த தாகவும் வெளியுறவுத்துறை அமைச்சக செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

எரிசக்தி துறையில் இந்தியா மேற்கொண்டுள்ள சீர்திருத்தங்கள் வேலைவாய்ப்பை உருவாக்குவதோடு உலகளாவிய போட்டித் திறனை ஊக்குவிப்பதாக உள்ளது என்று புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் நடைபெற்று வரும் உலக பொருளாதார மன்ற கூட்டத்தில் எரிசக்தி தொடர்பான கருத்தரங்கில் நேற்று அவர் உரையாற்றினார்.

இந்தியா தூய்மையான எரிசக்தியை மக்கள் நலன் சார்ந்த வளர்ச்சி இயக்கமாக மாற்றியுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

இது நாட்டின் எரிசக்தி பாதுகாப்பை வலுப்படுத்துவதுடன், மின்சாரத்திற்கான செலவையும் குறைத்துள்ளது என்றும் அவர் கூறினார்.

தற்போது நாட்டில் புதை படிவமற்ற எரிசக்தி திறன் 265 ஜிகா வாட்டாக உயர்ந்துள்ளது என்றும், இது நாட்டின் மொத்த நிறுவப்பட்ட மின் திறனில் சுமார் 52 சதவீதம் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்த மாநாட்டின் ஒரு பகுதியாக தூய்மையான எரிசக்தி, எரிசக்திக்கான முதலீடுகள் மற்றும் சர்வதேச ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து தொழிலதிபர்கள் மற்றும் பல்வேறு நாடுகளின் அமைச்சர்களுடன் இருதரப்பு பேச்சுவார்த்தையையும் திரு. பிரல்ஹாத் ஜோஷி நடத்தினார்.

<<<<>>>>

மக்கள் தொகை கணக்கெடுப்புக்கான முதற்கட்டப் பணிகள் ஏப்ரல் ஒன்றாம் தேதி தொடங்கும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.

முதற்கட்ட கணக்கெடுப்பின்போது பொதுமக்களிடம் கேட்கப்பட உள்ள 33 கேள்விகள் குறித்த அறிவிப்பை அரசு வெளியிட்டுள்ளது.

ஏப்ரல் ஒன்றாம் தேதி முதல் செப்டம்பர் 30ஆம் தேதி வரை மாநிலம் மற்றும் யூனியன்பிரதேசங்களில் இந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

இந்தக் கணக்கெடுப்பின்போது கணக்கெடுப்பளார், வீட்டு உரிமையாளரின் நிலை, வீட்டின் பயன்பாடு, அறைகளின் எண்ணிக்கை, வீட்டில் வசிக்கும் நபர்களின் எண்ணிக்கை, குடும்பத்தலைவரின் பாலினம் உள்ளிட்ட பல்வேறு விவரங்களை சேகரிப்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடிநீருக்கான முக்கிய ஆதாரம், மின்விளக்கு, கழிப்பறை வசதி, கழிவுநீர் வெளியேற்றும் முறை, சமையலறை வசதி, எல்.பி.ஜி இணைப்புகள் போன்ற அடிப்படை கேள்விகள் கேட்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வீடுகளில் உள்ள வானொலி, தொலைக்காட்சி, இணையவசதி, மடிக்கணினி, ஸ்மார்ட்ஃபோன் போன்ற சாதனங்களின் பயன்பாடு குறித்தும் தகவல்கள் திரட்டப்படும் என்று மத்திய அரசு கூறியுள்ளது.

<<<<>>>>

பங்களாதேஷில் நாடாளுமன்றத் தேர்தலுக்கான பிரசாரம் நேற்று அதிகாரப்பூர்வமாகத் தொடங்கியது.

அந்நாட்டின் பிரதான அரசியல் கட்சிகள் நாடு தழுவிய அளவில் பேரணிகளையும், கொள்கை விளக்கக் கூட்டங்களையும் நடத்தி வருகின்றன.

பங்களாதேஷ் தேசியவாத கட்சி, சில்ஹெட் நகரில் உள்ள அலியா மதரஸா மைதானத்தில் ஆயிரக்கணக்கான தொண்டர்கள் மற்றும் ஆதரவாளர்கள் பங்கேற்ற பிரம்மாண்டப் பேரணியுடன் தனது தேர்தல் பிரச்சாரத்தை தொடங்கியது.

மக்கள் பங்கேற்பை உறுதி செய்யும் நோக்கில் ஐந்து அம்ச பிரசாரத் திட்டங்களையும் அக்கட்சி அறிவித்துள்ளது.

பங்களாதேஷ் பொதுத்தேர்தல் வரும் பிப்ரவரி 12-ஆம் தேதி நடைபெறவுள்ளது.

<<<<>>>>

இந்தியா மற்றும் அரபு நாடுகளுக்கு இடையேயான பல்வேறு ஒத்துழைப்பு திட்டங்கள் குறித்து வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் செயலாளர் திருமதி நீனா மல்ஹோத்ரா புதுதில்லியில் உள்ள அரபு நாடுகளின் தூதர்களை சந்தித்துப் பேசினார்.

இந்தக் கூட்டத்தின்போது இந்தியாவுக்கும், அரபு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்துவது என்று

ஒப்புக்கொள்ளப்பட்டதாக வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் செய்தித்தொடர்பாளர் திரு. ரந்தீர் ஜெய்ஸ்வால் சமூக வலைதளத்தில தெரிவித்துள்ளார்.

பல்வேறு துறைகளில் மேற்கொள்ள வேண்டிய குறிப்பிட்ட நடவடிக்கைகள் மற்றும் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய பகுதிகள் குறித்து இந்த சந்திப்பின்போது அடையாளம் காணப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை நோக்கிய பயணத்தில் மத்திய கிழக்கு மற்றும் அரபு நாடுகளுடனான உறவை மேலும் வலுப்படுத்துவதாக இந்த சந்திப்பு அமைந்திருந்தது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

மத்திய தரைக்கடல் பகுதியில் ரஷ்யாவுடன் தொடர்புடைய எண்ணெய் டேங்கர் கப்பல் ஒன்றை பிரான்ஸ் கடற்படையினர் தடுத்து நிறுத்தி சோதனையிட்டதாக பிரான்ஸ் அதிபர் திரு. இம்மானுவேல் மேக்ரான் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், சர்வதேச சட்டங்களை மீறுவதை பிரான்ஸ் ஒருபோதும் சகித்துக் கொள்ளாது என்று உறுதிபடத் தெரிவித்தார்.

ஐரோப்பிய மற்றும் சர்வதேச தடைகளுக்கு உட்பட்ட அந்தக் கப்பல், ரஷ்யாவின் 'நிழல் கப்பற்படையின்' ஒரு பகுதியாகச் செயல்பட்டதாகச் சந்தேகிக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அந்தக் கப்பல் தவறான கொடியைப் பயன்படுத்தி சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கலாம் எனச் சந்தேகத்தின் பேரில் இந்த அதிரடி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

<<<<>>>>

இயற்கை விவசாயத்தை மத்திய அரசு பல்வேறு வகைகளில் ஊக்குவித்து வருகிறது.

இது தொடர்பாக பிரதமர் திரு. நரேந்திர மோடியும் அவ்வப்போது விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறார்.

இதன் காரணமாக நாடு முழுவதும் விவசாயிகள் இயற்கையான உரங்களைக் கொண்ட விவசாயத்தில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இதன் ஒரு பகுதியாக வேலூர் மாவட்டத்தில் இயற்கை விவசாயத்தில் பாரம்பரிய நெல்களை சாகுபடி செய்து வருவதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

**(Sound Byte - Farmers - 43 Sec)**

<<<<>>>>

இந்தியா - நியூசிலாந்து அணிகளுக்கு இடையேயான இரண்டாவது ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

இப்போட்டி ராய்ப்பூரில் இன்றிரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

------------------

இந்தோனேஷியா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதியில் இந்தியாவின் லக்ஷயா சென் இன்று தாய்லாந்தின் **Panitchaphon**-ஐ எதிர்கொள்கிறார்.

--------------

மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் குஜராத் அணி 45 ரன் வித்தியாசத்தில் உத்தரப்பிரதேச அணியை வென்றது.

**<<<<The End>>>>**